[2nd November 1966

திரு. எம். எஸ். மணி : நகர எல்லேக்குள்ளே ஓடுகிற பஸ்களேப் பொறுத்த வரையில், நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். நகராட்சி மன்றங்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தக் கூடாது என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியானுல், தனியார்கள் நகர பஸ் சர்விஸ் நடத்தி நஷ்டப்படுகிருர்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிருர்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்களுடைய கணக்கு களேப்பற்றி நான் அபிப்பிராயம் கூறுவதற்குத் தயாராக இல்லே. ஆனுல், தனியார் யாரும், நகரங்களில் மாத்திரம் பஸ் சர்விஸ் நடத்தி, 'மொஃபஸல்' பஸ் ஸர்விசையும் சேர்த்து நடத்தாவிட்டால், அவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படும். இதற்கு உதாரணம், ஏற்கனவே இதுபற்றிய விவாதம் நடந்தபோதுகூடச் சொன்னேன். அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில் நடந்த ஃபிஃப்த் அவென்யூ கோச் கம்பெனியும் ஏறக்குறைய தனியார் துறைதான், நஷ்டத்தில் ஓடி அது திவால் ஆகிவிட்டது, நகராட்சி ஏற்றுக்கொண்டு நடத்துகிறது என்று சொன்னேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : கொள்கையை உத்தேசித்து, நகரங்களில் ஓடுகிற பஸ்களேச் சர்க்கார் ஏற்று நடத்துவதற்கு முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் கொள்கை, எந்த எந்த நகரங்களில் அவசியம் என்று கருதப்படுகிறதோ, அங்கே சர்க்கார் நடத்துகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : நமது சென்னே நகரத்தில் ஓடிக் கொண்டிருக்கிற சர்க்கார் பஸ் லாபத்தில் ஓடுகிறதா ? நஷ்டத்தில் ஓடுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பல முறை இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. நகரத்தில் ஓடுகிற பஸ்களெல்லாம் நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொன்ஞல், சென்னே நகரமும் அதனுள் அடங்கியிருக்கிறது.

State Transport buses between Madras and Polur

* 313 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government propose to ply two State Transport buses on each of the following routes between Madras and Polur (i) via Kancheepuram, Cheyyar and Chetpet and (ii) via Chingleput, Uttiramerur, Wandiwash and Chetpet?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லே.

Provision of shelters at bus stops in City

* 314 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the State Transport Department has proposed to provide shelters at all the bus stops in Madras City?

2nd November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை. சென்னை நகரில் பஸ் நிற்குமிடங்களில் நிழல் அமைப்புகளை சென்னை மாநகராட்சி நிறுவி வருகிறது.

திரு. வை. சங்கரன் : அதிகமான பிரயாணிகள் பஸ்களுக்காகக் காத்திருக்கும் முக்கியமான இடங்களிலும், அதிகமான பிரயாணிகள் ஏறி இறங்கக்கூடிய இடங்களிலும் 'ஷெல்டர்' களை அமைக்கும்படியாகக் கார்ப்பரேஷனைச் சர்க்கார் தூண்டுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரத்தைப் பொறுத்த கேள்வி இது. சென்னை நகரத்தில் 521 பஸ் ஸ்டாப்கள் இருக்கின்றன. 255 பஸ் ஸ்டாப்களில் ஷெல்டர்கள் இருக்கின்றன. சமீபத்தில் நான் அறிக்கை ஒன்று கொடுத்து, ஷெல்டர்கள் கட்டுவதற்குப் பொது மக்கள் தாராளமாகப் பணம் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்காக இருபத்தெட்டாயிரம் ரூபாய் சொச்சம் வந்திருக்கிறது. ஆகவே, இன்னும் 28 ஷெல்டர்கள் போடப்படும். மேலும், மேலும் இந்த விதமான நன்கொடைகள் வந்துகொண்டிருக்கின்றன.

Export of bus coaches

* 315 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have entered into any agreement to supply bus coaches built at Madras State Transport Department Workshop to certain countries abroad ; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

கால்நடைப் பண்ணைகள்

* 316 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஓசூர் கால்நடைப் பண்ணையை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஹோசூர் மாட்டுப் பண்ணையில் உள்ள கோழி வளர்ப்புப் பிரிவை விரிவாக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அங்கு ஆண்டு ஒன்றுக்கு 25,000 கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். பற்பல துறைகளிலிருந்து கோழிக்குஞ்சுகள் வேண்டுமென்று கேட்பதால், இந்த அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணையில் தற்பொழுது வேறு எந்த விதமான விரிவுத்திட்டங்களையும் நிறைவேற்றும் எண்ணமில்லை.